## DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.

**Calendar Case No. 46/2021**

**Prosecution Witness**:5

| | | | |
|---|---|---|---|
| Name | கவின் (PW5) | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | **Age** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17th **day of November 2025** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused present.)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது ஊஞ்சலூர், குள்ளகவுண்டர்புதூரில் குடியிருந்து கொண்டு டிரைவராக வேலை செய்து வருகிறேன். ஜெயராஜ் என்பவரை எனக்கு தெரியாது. ஆஜரில் உள்ள எதிரியும் எனக்கு தெரியாது. நான் வேலைக்கு சென்றுவிட்டு திரும்பும்போது விபத்து நடந்ததாக தகவல் சொன்னார்கள். விபத்து நடந்த தேதி, மாதம், வருடம் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. விபத்தின் போது யார் யார் மீது மோதினார்கள் என்பதோ, இந்த விபத்துக்கு காரணம் யார் என்றோ எனக்கு தெரியாது. போலீசார் விசாரணையிலும் நான் மேற்சொன்னவாறு தான் சொன்னேன்.

**அரசு தரப்பில் சாட்சியை இந்திய சாட்சிய சட்டப் பிரிவு 154ன் கீழ் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:-**

போலீசார் விசாரணையின்போது கடந்த 29.03.2021ம் தேதியன்று இரவு சுமார் 08.00 மணிக்கு நானும் எனது மாமா மயில்சாமியும் ஒரு இருசக்கர வாகனத்தில் கருமாண்டாம்பாளையம், குளத்தோட்டம் கார்த்திகேயன் வீட்டின் முன்பு வந்தபோது ஜெயராஜ் என்ற நபர் ரோட்டின் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி அவரது வீட்டிற்கு செல்வதற்காக ரோட்டை கடந்து சென்றவர் மீது அதே ரோட்டில் தெற்கில் இருந்து வடக்கு

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.11.17 14:47:14 +0530

நோக்கி ஆஜர் எதிரி TN 28 L 6883 என்ற எண்ணுள்ள பஜாஜ் CT 100 இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து ஜெயராஜின் மீது மோதியதாக சொன்னால் சரியல்ல. மேற்சொன்ன விபத்தை நான் நேரில் பார்த்ததாக சொன்னால் சரியல்ல. தற்போது எதிரி என்னிடம் கேட்டுக்கொண்டதால் உண்மையை மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :-**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டதால் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்பட்டது.

**மறுவிசாரணை:- இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN
Digitally signed by PANDIARAJAN
Date: 2025.11.17 14:47:19 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 46/2021**
**Prosecution Witness**:6

| Name | சிவகுமார் (PW6) | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | | Calling | |
| Village | | **Age** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17th **day of November 2025** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused present.)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது கருமாண்டாம்பாளையத்தில் குடியிருந்து கொண்டு சொந்தமாக தொழில் செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் பார்வைமகஜரில் இரண்டாவதாக உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதை ஒரு விபத்து வழக்கிற்காக செய்தேன். 30.03.2021 அன்று காலை சுமார் 10.00 மணிக்கு வேலைக்கு செல்வதற்காக நான் எனது வீட்டில் இருந்து வெளியே வந்தேன். அப்போது அங்கு போலீசார் இருந்தார்கள். முந்தைய நாள் இரவு நடந்த ஒரு விபத்து வழக்கு சம்பந்தமாக போலீசார் ஒரு வரைபடம் தயார் செய்தார்கள். அதற்காக நானும் மலையப்பன் என்பவரும் கையொப்பம் செய்தோம். அந்த **பார்வைமகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :-**

நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதி இருந்தது என எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறியது போல் சம்பவ இடத்தில் கையொப்பம் செய்யவில்லை என்றாலும் அது காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.11.17 14:47:26 +0530

மறுவிசாரணை:- இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சுருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN

Digitally signed by PANDIARAJAN
Date: 2025.11.17 14:47:30 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.